
பழமை !
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# பழமை!

**வெளியீடு :**
**அன்பின் குடில்,**
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
**கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,**
**அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,**
தமிழ்நாடு - 638 311
**தொலைபேசி : (04256) 227655**
**மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in**

முதற்பதிப்பு : மஹாசிவராத்ரி 2015

பிரதிகள் : **300**

அட்டைப் படம் : திரேதாயுக ஆரம்பகால மனிதன்

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


1. கண்ணன் வாக்கு ........................................ 2
2. குருவின் சிறப்பு ........................................ 3
3. வினை & விதியின் செயல் ........................................ 5
4. நிகழ்ச்சிகளை அறிதல் ........................................ 6
5. ஸ்ரீபாதம் & ஸ்ரீதிருவடி ........................................ 9
6. லௌகீகம், தெய்வீகம் & பரமார்த்தீகம் ........................................13
7. விதி & வினையின் தடுமாற்றம் ........................................ 16
8. பொறுமை & சகித்தல் ........................................17
9. ஸ்ரீபரமாத்மா & ஜீவாத்மா ........................................21
10. நாம ரூபத்தினுள் சைத்தன்யம் ........................................25
11. இறை & பரம் ∝ குரு ........................................ 29
12. கண், காது & (வாய்) வாக்கு ........................................ 32
13. ஒன்றினுள் ஒன்று அடக்கம் ........................................ 36
14. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? ........................................ 43
15. குரு யார்? ........................................ 47
16. திருவுலரும் திருமந்திரமும் ........................................53
17. ஸ்ரீபகவானும் பரமும் ........................................60


எல்லாம் நீ!





"ஸத்திய வாக்கை" (1)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

ஸ்ரீபக் குரு திருவடி துணை!

நம்பினோர் கெடுவதில்லை!

தெய்வம் மனுஷ்யாளும்!

யசீ பாவம் தப்பவதி!

தெய்வம் (நேரில்) தோன்றுத் துணைவன்!

ஸ்ரீராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம்;

ஓம்!!!

அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம், அகமே எல்லாம்!
ஜகம், பரமும், ஜீவர்களும் சிறிதும் இல்லை!!

உ




1

## கண்ணன் வாக்கு.

கடமையை செய். பலனை எதிர்ப்பாராதே

பொருள் :- ஸ்ரீ பகவானைப் பணிவதும்;
அவனைப் போற்றுவதும்; அவனைக் காண
ஏங்குவதும்; அவனோடு கலக்க எண்ணுவதும்;
மட்டுமே உன் கடமையாகும். அவனிடம்
நீ ஒருவனே வேண்டும்; வேறெதுவும் வேண்டாம்
என வேண்டுவதே பக்தி ஆகும்.
உன்னைக் காப்பதும், உனக்கு ஆவன
செய்வதும் அவன் அளப்பரிய கருணையாகும்.
உனக்கென வாழ நீ பிறக்கவில்லை.
அவனுக்காகவே நீ பிறந்தாய் என உணர்க.
"உனக்காகவே அவன் இருக்கிறான்".
"உனக்காகவே அவன் இயங்குகிறான்".
அவன் உன் தந்தை. நீ அவனுடைய குழந்தை.
முடிவில் அவனும் நீயும் ஒன்றே இது ஸத்தியம்.



௨ குருவின் சிறப்பு.

உன் கடமை அவனைப் பணிவதும், போற்றுவதும், அவன் அடியார்களுக்கு சேவை செய்வதுவே தலையாய கடமை ஆகும்.

அவன் கடமை உன் நிலை கண்டு தக்க தருணத்தில் தகுந்ததை குறிப்பறிந்து செய்வதாகும்:

ஸ்ரீஸத்குரு திருமேனி காண்பது.


,, திருவார்த்தையை கேட்பது.

,, திருநாமம் செப்புவது (சொல்வது)

,, திரு உருவை சிந்தித்து, சிந்தித்து உருகிக்கரைந்து அவருள் மயமாவது. (இந்நான்குமாகும்)

(1) ஸ்ரீஸத்குருவை மட்டும் நாமரூப துவைதமாகக் கண்டு; நாமரூப ஜகஜீவ சொந்தபந்த பாச பற்றின் துவைதபயத்தை நாசம் செய்ய வேணும்.


(௨) ஸ்ரீஸத்குருவின் அமுதவார்த்தைகளைக் கேட்டு, நாமரூப சொந்தபந்தபாச தோற்றம் எவ்வாறும் சொல்லிலும் செயலிலும்;



4

பொய் என மெய்யுணர்வு பெற வேண்டும்.
அதீதிர அவசர வேக டென்ஷன், எமோஷன்
போன்ற குணதோஷங்களை நாசம் செய்ய வேண்டும்.
(3) ஸத்குரு தேவா என்றே. ஸத்குருநாதா
என்றே. ஸர்வசுதா குரு நாம ஸ்மரணையுடன்
இருந்து கொண்டு. (மற்றும் பேசும்) வாதத்தில் கவனமாக இருக்கலாம்.
(4) ஸ்ரீ ஸத்குரு திரு உரு என்பது நம் ஸ்ரீ உபாசனா
மூர்த்தியையும் ஸ்ரீ குருதேவரையும் எவ்வித
பேதமும் இல்லாமல் ஒன்றாக உணர்ந்து நம் மனம்
கரைந்து மயமா(க்)குவதாகும்.

இந்த விதமாக ஸ்ரீ ஸத்குரு தேவரை
த்வைதமாக காண்பதும். அத்வைதமாக உணர்
வதும் ஆகும். காட்சியால் எளிமை பணிவு
உண்டாகும். உள் உணர்வினால் காங்கமற்ற
ஓர்மை உண்டாகும் என உணர்க.



# வினைவிதியின் செயல்

விதியின் வழியே மதிசெல்லும் என்பதும்;
விதியை மதியால் வெல்லலாம் ” ;
சற்றுமாறுபட்ட கருத்தை உடையதாகும். கலி
யுகத்திற்காக அதன் கருத்தைசற்று மாற்றி
யிருக்கிறார்கள் ஸ்ரீமஹான்கள். அதாவது ???
விதியின் வழியே மதிசெல்லும் என்பதை. மதி
யென்பதை இங்கு மனம் புத்தி (மதி) சித்தம்,
என்பதை மூன்றையும் ஒன்றாக கொள்ளலாம். அதாவது
வினைவிதிப்படி மதியென்றபுத்தியானது மயங்கிச்
செல்லும் என அறிக. இது லௌகீகமாகும்.
அடுத்த வாசகமாகிய விதியை மதியால்
வெல்லலாம் என்பதை. இங்கு மதியெனக்
கூறப்படுவது கூர்ந்த திருஷ்டியாகிய அறிவு
ஆகும் என உணர்க. இவ்வறிவு இறை ஆற்றல்
உள்ளதாகும். அதாவது மாயாவின் துணையோடு
கூடியதாகும் என உணர்க. அத்தன்மையால்




அ

6

# நிகழ்ச்சியை அறிதல்.

விதியையும்! வினையையும்! பாதகம் இல்
லாமல் நமக்கு சாதகமாக அக்கக் கூடியதாகும்.
இங்கு மதிநின்ற கூர்ந்த திருஷ்டியான;
அறிவுக்கு இந்த நாம ரூப ஜக உலகமானது;
தலை வணங்கும் என அறிக. இந்த அறிவுக்கு
பொறுமையும்! பணிவுமே! இரு கண்களாகும்.
பணிவும் பொறுமையும் எங்கு நிறைந்திருக்கிற
அது கனி (தணி) வான பள்ளமாகும். (தோ)
அங்கு இறை & குரு கருணைப் பிரவாகமானது
தானே வந்து அப்பள்ளத்தை நிரப்பிவிடுமென
ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

கேள்வி:- நடைபெறும் நிகழ்ச்சிகளை நாம்
முன்னதாகவே தெரிந்து கொண்டால் சமயோசிதம்
போல் நடந்துகொள்ளலாமல்லவா? சில
அசம்பாவிதங்களை தடுக்க முடியுமல்லவா?
வினையின் பாதிப்புகளிலிருந்து விடுபடலாமல்லவா?
அதை ஏன் ஸ்ரீபகவான் (நமக்கு) கொடுக்கவில்லை?



7

பதில்:- நல்ல பயனுள்ள கேள்வியே. கவனம் வேண்டும். நடைபெறப் போகும் கர்ம காரியங்கள் (வினை & விதிகள்) ஸ்ரீ பகவான் நமக்குத் தெரியாமல் தம் மாயாவால் நடத்துவது நம் நன்மையைக் கருதிட, தம் கருணையினால் " ஜீவ நன்மைக்கே என உணரவும். காரணம்:- நமக்கு முன்னதாகவே நடைபெறும் அக்கர்ம காரியங்கள் தெரிந்தால், அதை மாற்றி அமைக்கவும், அதை விலக்கவும். அந்த நேரம் நம் புத்திக்குதக்க வழி நடக்கவும் (நடத்தவும்) முற்படுவோம். இதனால் நம் வினை பெருகும். விதி வலுவடையும். மேலும் அதி பயங்கரமான நிகழ்ச்சிகள் நடைபெற ஏதுவாகுமே தவிர சுமுகமாகாது. ஒன்று இரண்டாக பெருகுமே தவிர ஒழிவடையாது. மேலும் மேலும் சிரமம் தான் உண்டாகுமே தவிர சிரமம் குறையாது என அறிக. வினை & விதிப்படி நடைபெறும் கர்மகாரியங்களை பொறுமையுடன் தலைவணங்கி ஏற்றுக் கொண்டால்;



விதியையும்! வினையையும்!
மனிதன்
தெரிந்துகொண்டால் (8)
உலகம் ஓர்
திட்டமிட்ட மாயா காரியம்
என்பது பொய்யாகிவிடும்.
பயமும் துக்கமும் அதிகரிக்கும்
சாந்தியும் அமைதியும் கிட்டாது
மறைபடும்.

கடுமை கொடுமைகளிலிருந்து விடுபடலாம்.
மனதடுமாற்றத்திலிருந்து தப்பிக்கலாம். வினையின்
பளு குறையும். உலகம் அமைதியாக மாறும்.
எல்லாம் நலமே என்றும், எல்லோரும் நல்லவரே
என்றும், மனப்பழக்கத்தை கொண்டுவந்துவிட்டால்
போதும். (வழக்கத்தை (பேச்சு செய்கை)

துக்கம், துயரம், கஷ்டம், நஷ்டங்களிலிருந்து
அவஸ்யம் விடுபடலாம். எதிர்த்துப் போராடுவதை
விட, தலைவணங்கி ஏற்பது சாலச்சிறந்ததாகும்.
ஆனால் ஆரம்பம் சற்று கடினமாகத்தோற்றினாலும்,
முடிவு சுகமாகவும், நலமாகவும், ஆனந்தமாகவும்,
மாறிவிடும் இது ஸத்தியம்.

ஆகையால்தான் ஸ்ரீ பகவானவன் நடைபெ
றும் வினைவிதியின் தர்ம காரியங்களை
இச்சீவன் அறியாவண்ணம் மாயாவால் மறைத்தான் என
ஆதிஸ்ரீ மஹான்களின் வாக்காக அறிகிறோம்.




ஸ்ரீபாதம் & ஸ்ரீதிருவடி

ஸ்ரீ<u>கால்கள்</u> என்றாலும், ஸ்ரீ<u>பாதங்கள்</u> என்றாலும்,
ஒன்றே. அதேபோல்?
ஸ்ரீபாதுகை என்றாலும், ஸ்ரீபாத ரக்ஷை ,, ,
திருவடி ,, ஒன்றேயென உணர்க.

(1) கால்களாகிய பாதமே நடந்துசென்று,
தர்மகாரியங்களை முடித்து நிறைவு செய்கிறது.
கைகளால் கொடுத்து வாங்கினாலும்,
கால்களால் நடந்து சென்றுதான் கர்மா பெரும்பாலும்
நிறைவு பெறுகிறதென ஸத்தியமாய் உரைக்க.
ஆகவே கால்களாகிய பாதமே முதலிடம்
பெறுகிறது என ஸ்ரீமறைகள் வாயிலாக அறிகிறோம்.


(2) அதேபோல் ?
பாதுகை என்ற திருவடியில் ஏறிநின்று
கொண்டுதான் நடந்து செல்கின்றோம்.
வினை & விதிவசத்தால் குறிப்பிட்ட இடத்தை
அடைகிறோம். தர்ம காரியங்களை செய்து முடிக்கிறோம்.





ஆகவே இங்கு பூமியை தொடும் பாக்கியத்தை திருவடி ஒன்றே பெறுகிறது. திருவடி மேல் நின்று கொண்டு தான் பாதம் ஆனந்தம் அடைகிறது. ஆகவே திருவடித் தாஸியானது முதலில் திருவடி மேல் தான் படுகிறது. பின்பு தான் பாதத்தை ஸ்பரிசிக்கிறது. இங்கு பாதத்தை உன் உபாஸ மூர்த்தியாகிய இறைவனாக உணர்வாயாக.

திருவடியை ஸ்ரீ ஸத்குரு தேவனாக உணர்க. ஆகவே இங்கு இறைவனும் குருவுமாக இருந்து கொண்டு தான் கர்மகாரியங்களையும் செய்கிறார் இறைவனும் குருவுமாக இருந்து கொண்டு தான். பரஅம்ஸ திருவடித்தாஸியாகிய ஆத்மா, என்றும். பரமாத்மா என்றும், காலாதீதபரம் என்றும். விளங்கும் பரிபூரண பரப்பிரம்மஸ்திதியை உனக்கு அளிப்பது திருவடி என உணர்க. ஆகவே தான் ஸ்ரீ பாத சேவையை விட ஸ்ரீ பாதுகா சேவையே (திருவடி சேவை) முதலிடம் பெறுகிறது ஆகவே ஸ்ரீ திருவடி (பாதுகை) பரசொரூப அம்ஸமாகும் என உணர்க.



பக்தனும், ஞானியும், தம் இரண்டு
பாதங்களாலேயே நடந்து நடந்து
செல்கின்றனர். ஸ்ரீபாத தூளியும்
(ஜீவாணு, பரமாணு, ஆகிய ஆத்மா)
அவர்கள் ஸ்ரீபாதத்திலும், ஸ்ரீபாதுகையிலும்
(திருவடியிலும்) ஸ்பரிஸம் பண்ணப்படுகிறது.
ஆகவே அப்பாதத்தை வருடி சேவை செய்வ
தாலும். ஸ்ரீபாதுகா (திருவடி) சேவை
செய்வதாலும். பரஅம்ஸ ஜீவன் முக்தியை
பெறமுடியும் என ஆதிஸ்ரீ மஹான்கள் திரு
வாக்காக அறிகிறோம்.

குறிப்பு:- ஸத்குரு கிருபையும் அவர் வாக்கிய
சிரத்தையும் அவர் சேவையும் இயல்பாக
கிடைக்கும் என அறிக. ஆகவே ஜீவன் முக்தி
உண்டு என அறிக.

ஆகவே அப்பாதத்தையே ஸ்ரீபகவான்
தம் நெற்றியில் (புரியட்டகத்தில்) அணிகிறார்
என அறிக. அதுவே ஜடாரி என ஆலயங்களில்





பேசப்படுகிறது. வழிபாடும் செய்யப்படுகிறது.

ஸ்ரீபகவானும் தம் ஸ்ரீபாதத்தைதர இயலாவிட்டாலும், தம் ஸ்ரீபாதத்தைக்காட்டி யாம் இருக்க அஞ்சவேண்டாம் என அபயஹஸ்தமாக தம் இரு திருவடியையும் காட்டுகிறான். அவ்விரு திருவடிகளும் ஒன்று அறை அம்சம் / மற்றொன்று குரு அம்சமாகும். ஆகவே அந்த பக்தனும் ஸ்ரீபகவானுடைய அவ்விரு திருவடிகளையும் தம் நெற்றியில் ஸ்ரீ புரியாடகத்தில் திருநாமமாக அணிகிறான்.

ஸ்ரீபகவான் தம் திருவடியை தர முடியாது. ஆனால் திருவடியை நம்பு. குண தோஷங்களிருந்தும் நீ ரக்ஷிக்கப்படுவாய் என்கிறான். ஸ்ரீமஹான்களும் / ஸ்ரீ ஸத்குருவும் தம் இரு திருவடிகளையும் தந்து ஆட்கொள்ள முடியும். ஆகவே அவர்கள் தாவ சேவையாக ஸ்ரீபாத சேவையும் / ஸ்ரீபாத மாலையும் / கொடுக்கிறார்கள் என ஆதி ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.



6

## லௌகீகம் தெய்வீகம் பரமார்த்திகம்!

லௌகீகமும், தெய்வீகமும், ஒன்றாக இணையும்.

அதேபோல்
தெய்வீகமும், லௌகீகமும், ,, ,, .

காரணம் :- இவ்விரண்டிலும், குணங்கள் உண்டு.

தெய்வீகமும், பரமார்த்திகமும், ஒன்றுடன் ஒன்று இணையும். அதேபோல் ,, தெய்வீகமும்,
ஒன்றுடன் ஒன்று இணையும்.


காரணம் :- இவ் விரண்டிலும் ஒன்று என்பதிலும்; ஒருவன் என்பதிலும்; ஓர்மை ஒன்றுவதாவாகும்.

ஆ............. ஞ............. லி?

லௌகீகமும், பரமார்த்திகமும், ஒன்றுடன் ஒன்று இணையாது.


காரணம் :- லௌகீகம் எதுவும் இல்லாத முழுமித்தையாகும்.

ஆனால் பரமார்த்திகமே, முக்காலமும் எக்காலமும் இருக்கிறது என்று ஓர் இருப்புத்தன்மையோடு மட்டும் கூடியதாகும் என உணர்க.





லௌகீகத்தில் அனேக குணம் உண்டு.
தெய்வீகத்தில் ஏக குணம் என்ற ஸத்வ
குணம் மட்டும் உண்டு. ஆகவே இணையும்.
தெய்வீகத்தில் ஸ்ரீபகவான் ஒருவன் உண்டு
என்ற ஓர்மை உண்டு. பரமார்த்திகத்தில்
எங்கும், எல்லாமாய், ஏகமாய், அது ஒன்றே
(பிரம்மம் ஸத்தியம் ஜகத் மித்தை! என்ற
நிலையில்) இருக்கிறது என்ற ஓர்மை மட்டும் உண்டு.
லௌகீகம் என்பது நாம ரூப சம்பந்தம்
கொண்டு; வந்து, இருந்து, மாறி, மறையும்,
தன்மையதால் மித்தை (யாய்) எனக் கூறப்
படுகிறது. நாமரூப உலகமானது, மேலே கூறிய
நிலையில் விஹார விவஹார ஸத்யமேயன்றி
உண்மையில் இல்லையென உணர்க.
லௌகீகத்தை தெய்வீகத்தில் அனுபவத்தில் இணைத்து,
தெய்வீகத்தை பரமார்த்திகத்தில் அனுபவ நிலையால்
இணைக்க வேண்டும். (பாவனா நிலையில்)





லௌகீகத்தை தெய்வீகத்துடன் எல்லாம் நீ!
என்ற சரணாகதி நிலையால் இணைத்து,
கரைந்து, கலந்து மயமாக்க வேண்டுமேயன்றி
கலியில் வேறு மார்க்கம் இல்லை. நான்! எனதே!
ஜீவனின் இருப்பு நிலையாகும். அந்த ஜீவனை
அழித்து நாசம் செய்யாமல் தெய்வீகத்தோடு
லௌகீகம் இணையாது என அறிக.
லௌகீகம் நாசமாகி, தெய்வீகமாகாமல்
பரமார்த்திகம் என ஆகுதல் இக்கலியில்
முயல் கொம்பு போன்ற கதையாகும்.
லௌகீகத்தில் இருந்து கொண்டு இக்கலியில்
பரமார்த்திகம் ஆகுதல் என்பதும் இயலாத
காரியமாகும். அனுபவம் என ஒன்றில்லை என
இக்கலியுக மஹான்கள் சொல்வதின் காரணம்:-
லௌகீகத்தை தெய்வீகத்துடன் இணைத்து. தெய்வீ
கத்தை பரமார்த்திகத்துடன் இணைக்கற்கே
காரணமென ஸத்தியமாய் உணர்க.



## 7 விதி & வினையின் தடுமாற்றம்.

விளக்கு ஒளியின் (ஸ்ரீ பகவானின்
பொம்மை & படம்) முன் நின்று கொண்டு,
நல்ல காரியங்களும் செய்யலாம்.
தீய
அவ்விளக்கொளி! "இதை செய்க" என்றும்,
"இதை செய்யாதே" என்றும் சொல்லாது.
அது சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கும்.
அதாவது உன் அறிவாகவும் (உன்
மனசாட்சியாகவும், உன் அஹங்கார
மாகவும் (உன்மனமாகவும்) இருநிலை
களிலிருந்து கொண்டு உன்னை சரிபார்க்கும். அ
அது நீதி வழங்காது. காவ தேவனோ/தர் து
தர்மதேவனோ/ நீதி வழங்குவான். து
நல்லது கெட்டது உனக்கே தெரியும்.
எப்படி தெரியுமென்று? இறை & குரு உணர்
வோடு நீ அடங்கிஇருந்தால் தெரியும்.
யு...வ...ர்...சா...ய்...ஸ் ???



# 8 பொறுமை & சகித்தல்.

## பொறுமை & சகித்தலின் சாதனை :—


குற்றம் பார்க்கின் (இறை) சுற்றம் இல்லை.

அதாவது?

குற்றம் குறைகளாக உலகையும், மற்றும் ஜீவர்களையும், கண்டாலும், கேட்டாலும், பேசினாலும், எல்லாம் அவனே என்ற நிலையில் பரிபக்வமாக (இறை சுற்றமாக) சுற்றம் & சூழலைக் காண முடியாது என்பதே சத்தியம்.

உதாரணம் :—


(1) பலமுறை தாம்பூல எச்சிலை ஒருவன் காரி உமிழ்ந்தாலும்; அவன் துப்புகிறானே ஏன்? என்று முற்கவனம் இல்லாமல், நாம் இன்று குளித்தது சரி இல்லை என்பது இறைவன் தீர்ப்பு என அக்குற்றத்தை தாம் ஏற்றுக் கொள்தல் பொறுமை & சகித்தல் ஆகும். இறை உணர்வு இருந்தால் அவசியம் சகிக்க முடியும். ஜீவ உணர்ச்சி இருந்தால் கண்டிப்பாக சகிக்க முடியாது என்பதே சத்தியம்.



18

உ

காலதேவனின் தூதுவன் ஒருவன்,
ஓர் அந்தண பிரம்மச்சாரி ஒருவனை,
கும்பீபாக நரகத்தில் கால் வாரிவிட்டு
அழிக்க எத்தனித்தான் அப்பிரம்மச்சாரியோ
குற்றம் குறை பார்க்க இயலாமையிலும்,
தம்மை அவன் தள்ளிவிட்டான் என்பதை
மாற்றி, யாம் அங்கு ஓர் நபரை காணவே
என, வெளியில் இருந்தே தேடினோம்.
ஆனால் நீயோ, இங்கிருந்து பார்த்தால்
தெரியாது என உணர்ந்து எம்மை அங்கு
கீழே இறக்கி விட்டாய் என பணிவுடன்
அக்குற்றத்தை தானே ஏற்றுக்கொள்கிறான்.
இதனை இருவரும் ஆனந்தம் அடைந்தனர்.
அந்த நரகமும் சொர்க்க பூமியாக மாறியது.
பொறுமை சகித்தல் எல்லாம் நலமே என
ஏற்றல் ஆகிய நற்குணம் அறிவாகும்.
சுற்ற சூழல்களையும் இயற்கை மாற்றி
அமைத்து ஆனந்தம் சூழும். துன்பம் மறையும்.
இது சத்தியம்.




19

(3) அந்தரத்தில் அறிவிழந்த அவர் மனைவி
கமலா! கரும்பினால் அவர் தலையில் ஓங்கி
அடித்தாள். அந்த தெருவில் அனைவரும்
கூடி நின்று அக்காட்சியைக் காண்கின்றனர்
மனைவியின் அடாவடிச் செயல் தான்
பளிச்சிடுகிறது. ஆனால்? அங்கு
துகாராம் கண்டதும், உணர்ந்ததும்,
என்ன வென்றால்?

தம் மனைவியின் எண்ணமும் செயலும்
எப்படி இருந்தது என்றால்?


தம் உடலில் பாதி இடம் கொடுத்த
நம் கணவன் கரும்பு ஒன்றை அவர் மட்டும்
உண்ணாமல், நம்மிடம் கொடுக்கிறாரே?
அவருக்கும் பாதி கொடுப்போம் என்று
பரோபகார கருணையின் நல் எண்ணத்தினால்
அக்கரும்பை ஒடிக்க வகையறியாது
திகைத்தாள். ஆகவே கருணை மூர்த்தியாரை
நம் ஸ்ரீ பாண்டுரங்கனும் நம் தலையைச்
சுட்டிக் காட்டினான். நம் தலை நம் மனைவிக்கு,





ஓர் கரும்பாறையாக தோற்றியது போது
அந்த பத்தினியும் மெல்லிய கரங்களால்,
இப்பாறையானது தலையில் அடித்து, அதை
சரியாக இரண்டு துண்டாக்கி விட்டாள்.
கணவன் மீதுள்ள பதிபக்தியால் தம்
சொந்த பந்த பாச குழந்தைகளையும் மறந்து
பதிதர்மத்தை கடைப்பிடிக்கிறோமே
என்ற நிலையில், குற்றம் குறைகளை மறந்து
இருந்தவராய் பாதிக்கரும்மை தாம் ஏற்றோம்.
மீதிப்பாதியை தம் மனைவிக்கு ஆனந்தமுடன்
தந்து, கண்டு களித்தார். வினை வெந்து,
நொந்து, கழிந்து நாசமாயின.


அவஸ்யம் உங்களையும் முற்கவினை
முற்கோப, குற்றம் குறைகளை நாசம் செய்ய
முடியும். நீங்கள் சாதிக்க வந்தவர்களே.
இன்பமாக (துன்ப) வாழ வரவில்லை. இன்ப துன்பம்
உங்களுடைய தவ்வு. ஆனந்தமே உங்களுடையது.
சாதித்து கர்மவினை நாசம் செய்வீர்.




## ஸ்ரீபரமாத்மா & ஜீவாத்மா!

ஸ்ரீபரமாத்மாவும் & ஜீவாத்மாவும் தான் விளையாடுகிறார்கள். உலகமாகிய இந்த நாடக மேடையில் என ஸத்தியமாக உணர வேண்டும். வேறு எந்த விபரீதமும், விநோதமும் இல்லையென்பதே உண்மையாகும். ஸ்ரீபகவான் அறிவுடன் (ஆத்மாவுடன்) இணைந்து விளையாடுகிறான். ஜீவனாகிய நாம் (ஆத்மாவே நாம்) மனம் வசம் அகப்பட்டுக் கொண்டு விளையாடுகிறோம். நான் & எனதற்று நாம் & யாமாக இணைந்து விளையாடுவது அறிவாகிய ஸ்ரீபகவானாகும். நான் & என்றால் & எனதுடன் இணைந்து பிணைந்து இன்ப துன்பமென்றும், புண்ணிய பாபமென்றும், ஜனன மரணமென்றும் இருமையால் மனோ அவஸ்தையுடன் கூடி, மீளமுடியாமல் ஸம்ஸார கூபத்தில் சர்வசதா அவஸ்தைப் படுகிறோம். இது மீளமுடியாத துன்பம் என தெரிந்தும் நான் & என்றால் & எனதை விடமுடியவில்லையே இதன் காரணம் என்ன ???

௨௨



1 புலனின்ப போதையின் மயக்கம்.
2 பழக்க வழக்க தோஷ, மோஹ, போஹ வெறி.
3 முற்கவனத்தின் ஈர்ப்பின் கொடுமை கடுமை.
4 பாடம், படிப்பு பட்டம் பதவி பணம் மோஹ வெறி.
5 வாழ வேண்டும் என்ற கடும் ஆசையால் நாம்
வந்த காரியத்தை மறத்தல் (சாதனை செய்ய இயலாமை)
6 முற்கோபத்தால் தடுமாறி காட்சியின் வீழ்ச்சி
7 பணிவையும் பொறுமையையும் இயலாத்
தன்மையாக கருதி ஏமாற்றத்தின் தடுமாற்றம்.
8 ஒழுக்கக் கட்டுப்பாடில்லாமல் எப்படியும்
வாழலாம் என்ற அறிவீனம் (குறுக்கு புத்தி)
9 வேண்டியதைக் கவ்வாமல், வேண்டாததைப்
படித்துப் படித்து தர்மத்தை மறத்தல்.
10 நான் என்றல் எனது / நாம், யாம்
எம்மால் எம்முடையது என மாற்றி நம்மோடு
ஸ்ரீ பகவானையும் இணைக்காமல் மறந்த நிலை.
(தொடுத்தேன் வாங்கினேன் என்ற ஏன்? ஏன்? என்பதை
நாசம் செய்து தொடுத்தோம் வாங்கினோம் என ஓம்காரத்தில்
சோர்வும் செயலும் வந்தால் போதும்)




23

நான் & என்றால் & எனதற்று; எல்லாம் நீயே!
எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என
முழுமையாக ஸ்ரீபகவானிடமோ? குருதேவரிடமோ?
சந்தேககலக்க, பயமின்றி; இணையும் நிலையில்
நாம்! என்றும்; இணைந்து கலந்து மயமான நிலையிலு
யாம்! " சொல்லும் செயலும் வெளிப்
பாடானால் உணர்ச்சியாகிய எமோஷன்டென் ஷின்
சர்வ நாசமாகிவிடும்.

குறிப்பு :– நாம் என்றால் இருமை நிலையில்
ஸ்ரீபகவானுடனும் ஒருகுருதேவருடனும், ஒன்றிக
இணைந்தமையால் வோக மாயா வானது புண்ணிய
பாவ கணக்காகிய வினைவிதியை சற்று
மாற்றி வழிவகுத்து கொடுக்கும் இது ஸத்தியம்.



யாம் என நாம் ஸ்ரீபகவானிடமும் ஸ்ரீ
குருதேவருடனும் இணைந்து கலந்து இருமை
நாசமாகி ஒருமை ஸ்திரமானதால்
ஓம் என்ற பிரணவாகாரமுடன் கலந்துவிடுவதால்
மனம் செயல் இழந்து முஹத்தாகிவிடுகிறது.
இந்நிலையில் அறிவாகிய ஸ்ரீபகவானும்
யோகமாயாவுடன் செயல் இழக்கிறான்.
இந்நிலை அறிவு பேரறிவாகும் நிலையாகும்.
அறிவு செயல் இழந்து பேரறிவானால் ஜட, கட,
படாதிகள் / அனைத்தும் யோகமாயாவின்
செயல்களிலிருந்து விலகி, எல்லாம்
வெறும் ஜடமாகிவிடும். (இது சுத்த சூனியம்)
அங்கு குரு அருளும் யாம் அது / அது யாம் / என்ற
இருமையும் நாசமாகி யாம் யாமாகவே இருக்கிறோம்.
என்ற அகண்டப் பேரொளியின் அகண்டானந்த
நிலை பெற்று விடுவோம். இல்லை இல்லை பெற்று விட்டோம்.



## 10 நாமரூபத்தினுள் சைதன்யம்.


கணவன் & மனைவி என்ற நாமரூபத்துடனும்,
அண்ணா & தம்பி ,, ,, ,,
அக்கா & தங்கை ,, ,, ,,
மாமன் & மைத்துனன் ,, ,, ,,
தாத்தா & பாட்டி ,, ,, ,,
உறவு & சுற்றம் &
நண்பன் & மற்றும்
எந்த நாமரூபத்துடனும்;
மற்றும் உலகநிலையில் எந்த ,, ,, ;
எந்த

நம் வினை & விதியினால் தர்மசங்கட நிலையில்,
தாவம் & மனோ அவஸ்தைபடும் சமயம். மேலே கூறி
இவர்களில் எவர்கள் நாமாவை அவரி அழைத்தாலும்,
ஒரு பயனும் இல்லவே இல்லையென்பதே ஸத்தியம்.
அதாவது எவரும் வரமாட்டார்கள். எப்பயனும்
இல்லை. எவரும் உதவி செய்ய வர இயலாது. முடியாது
கிடையாது என்பதை ஸத்தியமாக உணரவும்.




௨௬

உள்ளம் உருகி
அழைப்பது ஸ்ரீபகவானை.
மனோ & தாவ சிரமங்கள்
நீங்குவதும் நீக்குவதும்
நாம ரூப ஜீவ தோற்றமாகும் என உணர்க.
அருகில் இருந்தாலும் உதவ முடியாது.
ஆ.............ன.............ல்?
ஸ்ரீபகவந் நாமாவில் எந்த நாமாவானாலும் சரி.
உள்ளம் உருகி, கண்ணீர் மல்கி, கத்திக் கதறி,
அ...ழை...த்...த...ம...று...க்ஷ...ண...ம்,
மேலே கூறிய நாமரூப வடிவில், அதிசய பந்து றும்
வினை சாராத நிலையில், தெய்வமும் மனுஷ்யா
துணைவன் தோன்றுத் நிலையில்
தெய்வம் நேரில்
உடனே உனக்கு ஆவன செய்யும் இது ஸத்தியம்.
அனைத்து நாம ரூபங்களுள்ளும் ஸ்ரீபகவான் என்ற
ஸைத்தன்யமே இருக்கிறது. இயங்குகிறது. என
ஸத்தியமாய் உணரவேண்டும். நாம ரூப மயக்கத்
தினால் உள்ளே உள்ள ஸைத்தன்யத்தை மறந்து
விடுகிறோம். மறந்து விடுகிறோம் என உண்மையாக
உணர வேண்டும். அமைதியும் நிதானமும் கொண்டு
உணர்ந்தால்தான் இவ்வுண்மை விளங்கும்.




27

ஆத்திரம், அவசரம், ஆவேசம், படபடப்பு இவை
கொண்டு பார்த்தால் இவ் உண்மை மறைபடும்.
காணாமே, காணாமே என்றால் எப்படி மனக்கண்
களுக்கு எப்படி புலப்படும். கிரைண்டர், மிக்ஸி
TV ஓடுகிறது. மின்சாரம் உன் கண்ணுக்கு
தெரிகிறதா? ஆனால் மின்சாரத்தால் தான்
இவைகள் இயங்குகின்றன என்று உணர்கிறா
காணவில்லை.
யல்லவா? அதே போல் தான் இதுவும்.
கண்ணுக்குத் தெரியவில்லை என்பதால்
ஸ்ரீ பகவான் இல்லாமல் போவாரா ?????
உன் கண்ணால் காணும் நாமரூப மயக்கம்
உன்னை என்ன பாடு படுத்துகிறது என்று
உன் உணர்வின் அறிவால் உணர்வாயாக.
பொறுமையாக உணர். அடங்கி இருந்து
உணர். குற்றம் குறைகளை மன்னித்தும்,
மறந்தும், விட்டுக்கொடுத்தும், கொஞ்சம்
சகித்துக் கொண்டும், சுற்றுநிதானத்துடனும்,
உணர்ந்தால் இவ் உண்மை ஸத்தியமாய் விளங்கும்.



28


ஆத்திர அவசர ஆவேசம் கொண்டு
அலைந்த காலங்களெல்லாம் போதாதா?
முட்டி மோதி மண்டை உடைந்து மூக்குடைந்து
போன காலங்களெல்லாம் போதாதா?
நாமரூப தோற்றங்களில்
சிக்குண்டு, சிதறுண்டு, சின்னாபின்னமாய்
போன காலமெல்லாம் போதாதா கொழுந்தே
நீ எழுந்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும்?
உன் காலம் விரயமாகிறதை உணராமல்
இம்மயக்கம் ஏன்? நாமரூபமெல்லாம்
பொம்மைகள் தானே? எல்லாம் பொம்ம
லாட்டம் தானே? எல்லா பொம்மைகளும்
மண் தானே? மண்ணாகிய தாவரத்தேபரம்தா
னே? பரம் நாம் தானே? அதுவே யாம் என்ற இருமை
யற் நாசமாதி யாம் யாமாகவே இருக்கிறோம்
என்ற ஓர்மையுடன் ஐயமாவாயாக. கு பாபா.
இருப்பதொன்றே. நடப்பது நலமே.



## இறை & பரம் & குரு!

11

எல்லாம் ஒருவனே! ஒருவன் பொருளே!
ஒருவன் செயலே! என்ற நிலை பெறமல்;
எல்லாம் பிரம்மமே என்ற நிலை பெற
முடியாது.
காரணம்:– நாமரூப தோற்றங்களும்;
அதன் இயக்கமும், (மாற்றமும், மறைவும்)
நாசமாகாமல் செயலற்ற பரம் ஆக முடியாது.
செயல்படுவது போல் தோற்றுவது மனம் &
அறிவாகும். (லௌகீகம் & தெய்வீகமாகும்)
லௌகீகத்தில் மனதின் மருட்சி ஆகும். மற்றும்,
தெய்வீகத்தில் மாயாவின் மயக்கம் ஆகும்.
லௌகீக மருட்சி நாசமாக வேண்டுமானால்;
ஸ்ரீ பகவானிடம் சர்வார்ப்பணம் ஒன்றே போதும்.
மாயாவின் மயக்கம் நாசமாக வேண்டுமானால்;
ஸ்ரீ ஸத்குருவின் வாக்கில் சிரத்தையும்;
அவரால் பெறும் பிரம்மார்ப்பணமும்; அவர்
சேவையும் முக்தியமென உணர்வால் உணர்க.




30

(A) மனதின் மருட்சி :- பல(ப்) பல ஜன்ம, பல கால, பழக்க (பேச்சு) வழக்க (செய்கை) மனோ தோஷ குணங்களை போகமாகும். இவைகள் ???

நான் ! என்னுடைய !! எனது !!! என்ற நிலையில்; அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், அபிமானம், ஆகிய நான்கினையும்; ஆகாமிய வகையில்;

மனதை பிடித்த மருட்சியின் (இருமையிலான) புண்ணிய பாப, ஜனன மரண சுழற்சியாகும்.

(B) மாயாவின் மயக்கம் :- ஜட சொரூபங்களையும், ஜீவ சொரூப தோற்றங்களையும், உண்டாக்கியது மாயாவாகும். இந்த மாயாவின் தோற்றங்களில் அழகு கவர்ச்சி மோஹம், காமம் இவைகளை மனப் பிரமையினால்





குறிப்பு :— பிரேமை : இறை உணர்வு.

பிரமை : நாமரூப போதைமயக்கம்.

எண்ணி எண்ணி, விட முடியாத, விட இயலாத எண்ண மயக்கமாகும்.

இது மனமயக்கமாக இருந்தாலும், மாயாவின் மயக்கமென ஞானிகளால் பேசப்படுகிறது இறை ரூபநாமத்திலும் ஓர் மயக்கம் உண்டு அதையும் மாயாவின் மயக்கமென சொல்லலாம்.

இந்த மருட்சியும், மயக்கமும், நாசமாக வேண்டுமானால் நான் & என்னால் & எனது, என்ற ஜீவஇருப்பு அடியோடு நாசமாக வேண்டும். ஜீவ இருப்பு நாசமாகாமல், பக்திக்கோ? முக்திக்கோ? மார்க்கம் இல்லையென சத்தியமாய் உணர்க. நான், என்னால், எனது, லௌகீகத்திற்கு உறுதுணையே. ஆனால் தெய்வீகத்திற்கும், பரமார்த்திகத்திற்கும், பெரும் தடையென உணர்க.






## 1௨ கண், காது & வாக்கு (வாய்)!

கண்ணால் நேருக்கு நேராக காண்பதை
அப்படியே உண்மையென நம்பிவிடாதே.
அதேபோல் காதால் நேருக்கு நேர்
கேட்கும் வார்த்தைதனையும் அப்படியே
உண்மையென நம்பிவிடாதே.
இவ்விரண்டையும் நம்பி தீர்வு காணாதே.

அவ்விரண்டும் அதனதன் வினை & விதி
யின், கர்மாவின்படி இயங்குவதால் உன்
மன குற்ற தற்பனைக்குப் பொருந்தாதென
ஸத்தியமாய் உணர்க. பின் நாம் எப்படி
நடந்து கொள்ள வேணுமென்று கேட்பாய்?
சற்று இறை & குரு/ உணர்வுடன் ஒன்றி,




33

எல்லாம் நீயே! என உணர்ந்தால்
அவசியம் உண்மை புலனாகும். நீ
உன்னுள் அடங்குவதைத் தவிர
வேறு மார்க்கம் இல்லவே இல்லை.


(A) அவரவர் பேசுவதைப் பேசியே தீர வேண்டும்.

(B) " செய்வதை செய்தே "

நீயும் புத்திபூர்வமாக பேசினால், வினைப்பின்னலில்
அகப்பட்டே தீர வேண்டும்.
நீ அறிவு பூர்வமாக செயல் பட்டால் (சர்வார்
ப்பணத்தில் நிலைத்துநின்றால்) வினைப் பின்னலிலி
ருந்து விடுபடுவாய். வார்த்தைக்கு வார்த்தை
பதில் ஆகாது. வார்த்தைக்கு மௌனமே
பதிலாகும். முதலில் சற்று கடினம் தான்.
பின்பு அனுபவம் ஆனந்தமே என அறிக.



வினை விதி என்பது புண்ணிய பாவ வினையும்;
கண்ணால் காணும் தூலமாக இருந்தாலும், அது
இயங்குவதை எதால்? எப்படி? என உணர முடியாது
அதி சூட்சுமமாய் நடக்கும் மாயாவை அதாவது
கால சக்கரத்தை அதாவது விதி நாயகன்!
என்று ஸ்ரீ பகவானை உணர வொட்டாமல்!
இப்பிரபஞ்சத்தை இயக்குவதே வினை விதி ஆகும்.
இந்த வினை விதியை மறைப்பது இந்த
ம ன தி ன்! அதாவது ம னி த னி ன்!!!!!!
நான்! என்னால்! எனதென்ற! அஹங்கார
மமகார! நா ம ரூ பத்தின்!
ம ய க் க போ தை யா கு ம் என
ஸ்ரீ மஹான்களால் உணர்த்தப்படுகிறது.



35

மேலே கூறிய விஷயங்களை அலசி ஆராய்வதற்கு ஓர் விளக்கமாவது :-

(A) கண்டேன்! கண்டேன் என வாய் புலம்புகிறது

(B) கேட்டேன்! கேட்டேன் " " "

வாய் கண்டதா? கேட்டதா??

இல்லவே இல்லை.

ஆனால் வாய் இருநிலைகளிலும் புலம்புகிறதே.

காரணம் என்ன தெரியுமா?

வாக்கே விதை வாசலாக இருப்பதால் அப்படி புலம்பலால் தானே வினை பெருக்கம் பெருக்க முடியும். மேலும் மேலும் ஜன்மா எடுக்க முடியும். என்ற பிரவர்த்திக்காகத்தான் வாக்கு புலம்புகிறது. ஆகவே வாக்கை குறைப்பீர்.
அடைப்பீர்.

என இதை நிறைவு செய்கிறேன்.



## 13 ஒன்றினுள் ஒன்று அடக்கம்


1. மரத்தை மறைத்தது "மாமத யானை
மரத்தில் மறைந்தது "

2. பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்.
பரத்தில் மறைந்தது "

இதன் கருத்தை சற்று உள் ஆழ வேண்டும்.

பலமுறை படித்ததே. பல முறை கேட்டதே.

ஆனால் அத்வைத கருத்தை மட்டும் (சுவைத்தாலும்). எத்தனை முறை உள் ஆழ்ந்து போனாலும் சலிப்பு உண்டாகாது. அப்படி சலிப்பு தோற்றினால்; நீ சரியாக உள் ஆழவில்லை என்பதே உண்மையாகும்.



37

(1) மண்பாண்டங்களி மண்ணைக் காணமுடியாது. பாண்டங்களாகத்தான் காண முடியும்.


காரணம் :- நாமரூபம் பரிச்சிட்டு தோற்றுவதாகும். நாமரூபம் நாசமானாலன்றி மண்ணைக் காணமுடியாது.

ஆனால் இந்தக் கேள்வியை உணர்வுபூர்வமாகக் கேட்கவாம்?

மண்பாண்டங்கள் ஏதால் ஆனது? என கேட்கவாம்?

உடனே மண்ணால் ஆனது என்பதில் வரும்.

,, மண்ணில் பாண்டங்கள் இல்லை என்றும் மண் இல்லாமல் பாண்டங்கள் இல்லை யென்பதும்; பிரத்தியக்ஷ உண்மையாகி விடும். படித்தாவோ? கேட்டாவோ? ஒருவர்க்கு சொன்னவோ? உண்மையாகாது.






நாமே அறிவுபூர்வமாக உணர்ந்தால் தான்
உண்மை தெளிவாகும்.

அதேபோல்?

மரத்தால் ஆன யானையின் உருவமானது
மரம் உடைந்தால்தான் அதுமரமாகும்
என்பதில்லை. அதையும் ஓர் கேள்வி கேட்க
லாம்

அந்த யானை எதால் ஆனது??? என
கேட்டால்? அந்தயானையும் மரத்தாலானது
எனபதில் வரும். அப்படியானால்???
மரத்தில் யானை இல்லை யென்பதும்
மரம் இல்லாமல் யானை இல்லை
என்பதும் ஸத்தியமான உண்மையாகும்.



39

உ பரத்தை மறைத்தது பஞ்சபூதங்கள் என்றும்,

பரத்தில் மறைந்தது " "

சொல்லும் ரகஸ்யம் என்னவென்றால் ???

ஆகாயம், காற்று, அக்கினி, ஜலம், மண்

ஆகிய பஞ்சபூதங்களாலும் ஆனதே இந்த


நாம ரூப ஜகத் ஜீவவர்க்கங்கள்

மனிதஇனம் உட்பட அனைத்து ஜீவசரீர தோற்றம்

& தாவரஸங்கமங்கள்.

எல்லாம் என உணர்க.

ஆoooooooooooo கோooooooooooவே?




பஞ்சபூதங்களில் எந்த நாமரூபமும் இல்லை என்றும்,

பஞ்சபூதங்கள் இல்லாமல் எந்த

நாமரூபங்களும் இல்லையென்பதும்

முக்காலமும் எக்காலமும் சத்தியமே ஆகும்

நன்றாக கவனிக்கவும்.

மரம் ஓர் யானையினுள் ஒளிந்திருக்கிறதா?


யானை மரத்தினுள் " ??

என ஓர் கேள்வியை கேட்டுப்பாருங்கள்.


மரமே உண்மையென்றும், அம்மரத்தில்

யானை வந்து போனது என தெளிவாகும்.

ஆகவே?




மரம் அதிஷ்டானம் என்றும், யானை அதில்
தோன்றிய ஆரோபம் என்பது விளங்கும்.
ஆகவே ஆரோபம் என சொல்லும் யானை
யானது
நாமரூப தோற்றமாகும். அந்த நாமரூபம்
வந்து, இருந்து, விளையாடி, மறைவதாகும்.
நாமரூபம் வந்ததும், இருந்ததும், விளையாடியதும்
மறைந்ததும் அப்பட்டமான பொய்யே.
அதன் தோற்ற அதிஷ்டானமாயிருக்கிற மரம்
ஏது? என உணர்ந்தால், உவமானமாக சொல்லும்
மண்ணே முக்கியமாகும். கண்ணால் காணும்
எல்லா நாமரூபங்களும் (அனைத்து ஜீவ
தோற்றங்களும், தாவர வர்க்கங்களும்)
மண்ணே. மண்ணுக்கு அயலாக ஏதுவும் எவரும்
இல்லையென்பதே ஸத்தியம்





இதனை நாம் அறிவு பூர்வமாக உணர்வது
என்னவென்றால்?

நாம் கண்ணால் கண்டும், தேடியும், காதால் விரும்ப கேட்டும்,
இவைகளை வைத்து இரவு பகலாக புலம்பியும்,
ஸத்தியமாக தோன்றும் இந்த நாமரூப
பிரபஞ்சமானது உறவு சுற்றம் நட்பு!
ஆடை அணிமணிகள்! பண்டம் பாண்டம்
பதார்த்தம்! அனைத்து போஜ போக்கியங்களும்!
நாமரூபமாக கண்டால் வேறு வேறுதான். பூரணமான
ஒன்றாக உணரப்பட்டு விட்டால், எல்லாம் சர்வ
நாசமாகி, அது யாம்! யாம் அது! என்ற நிலைபெற்று
அகண்டாகாரமாகவே இருக்கலாம். இருப்போம்.
இருக்கிறோம். இது ஸத்தியம். — ஸ்ரீ பாபா.
இருப்பது ஒன்றே. நடப்பது நவமே.




# எய்தவன் இருக்க அம்பை நோவானேன்

14

ஓர் பெரிய ஆலமரத்தில் அமர்ந்திருந்த ஓர் சிறிய பறவைக்கு குறி வைத்தான் ஓர் வேடன். குறி தவறி பறவை பறந்து சென்றது. பறவைக்காக சென்ற பாணம் அங்குள்ள மரக்கிளைக்குள் செருகி கொண்டு. நீ செல்லவாம். யாம் மற்றோர் காரியத்திற்கு காத்திருக்கிறேம் என சொல்லாமல் சொல்லி காத்திருந்தது.

வேடன் சென்று விட்டான். சில நாட்கள் கழித்து ஓர் பழியை ஏற்கும் நிலையில் அவ்வேடன் அந்த ஆலமரத்தின் கீழே வந்து ஓய்வாக படுத்து சற்று கண் அயர்ந்தான்.

விதி முடியப் போகும் ஓர் பெண் அங்கு வந்தாள். அவ் ஆலமரத்தின் மறு பக்கத்தில் அவளும் ஓய்வாக படுத்து நித்திரை கொண்டாள். அது சமயம் விதியை முடிக்கும் எமதூதுவர் இருவ அப்பெண்ணின் உயிரை கொண்டு செல்வதற்காக வந்தனர். அப்பெண்ணிற்காகவே காத்திருக்கும் பாணத்தை கண்டனர். ஒருவன் அப் பாணத்தில் அமர்ந்து கொண்டான். மற்றவன் பாணத்தின் கிளையை ஆட்டி விட்டான்.




114

பாணம் கிளையிலிருந்து நழுவி அப்பெண்ணின்
மார்பில் பாய்ந்து அவள் உயிரை கவர்ந்தது
அவ்விருவரும் அவள் உயிரை கவர்ந்து சென்ற
தூதர் பாணத்தின் மூலமாக னர்

எமதர்மனோ? அவன் தூதுவர்களோ?
வந்து அப்பெண்ணின் உயிரை கவர்ந்து சென்றனர்
என்று உலகம் சொல்லும்?

பாணம் குத்தி உயிர் துறந்தாள்
என்று தானே உலகம் சொல்லும்? என்
இச்சம்பவத்தை வைத்து என்னை உணர்கின்றேன்

காவன் பழி ஏற்கமாட்டான் என்றும்;
சூட்சுமம் கண்ணுக்கு தெரியாத தன்மையாலே
கண்ணுவ் காணும் தூலசொரூபங்களை
வைத்தே நீதிபரிபாலனம் பண்ணும் மனம்
படைத்த மனிதஇனம் கண்டேன் & கேட்டேன்
என;




45

பழி ஓர் இடம். பாபம் ஓர் இடம் என்பதை
உணர முடிவதில்லை. உணரமுடியாதுதான்.


A வினை :- புண்ணிய பாப கணக்கு.

B விதி :- புண்ணியபாபங்களை அணுவும்
பிசகாதபடி; அதிசூட்சுமமாய்! நாம &
ரூ ப ங் க ளை யும்! ஜ ட சொரூபங்களையும்
வைத்து விளையாடி; கணக்குமுடித்துவிட்டு;
பழி சொற்களையும்! பாப செயல்களையும்!
அவைகளின்மேல் போட்டுவிட்டு; தாமேதும்
அறியாததுபோல் தம்மைமறைத்துக் கொள்ளும்
பெருமை உடையது சூட்சும விதியாகும்.

46



வினையும் புண்ணிய பாபமும் சூட்சுமமாக
இருந்தாலும்; அது நின்று, இருந்து, வினை
யாடி தோற்றுவது தூல சொரூபங்களே ஆகும்.
ஆகவே தான் இத்தூலங்களின் இயக்கத்தை
உணராமல் தவறு புரிந்து கொண்டு இங்கு
குற்றம் குற்ற (பழிபாப) உணர்ச்சிகள்!
மேலும் மேலும் பெருகி இன்ப துன்ப!
ஜனன மரண சுழற்சிகளில் சிக்கியவன்
சிக்கிக் கொள்கிறான் எனவே உணர்க. சூட்சும
வினை விதியை பக்குவப்படுத்துவதற்கு
தூலக்கிரமத்தில் நாசம் செய்வதற்கும்!
சர்வார்ப்பணம் ஒன்றே தான் முழுவதும் என
இதை நிறைவு செய்கிறேன்.




47

# குரு யார்?


15

ஸ்ரீ பிரம்ம தேவன் / ஸ்ரீமந் நாராயணன் /
ஸ்ரீ சிவ பெருமான் / ஆகிய மூவரும்
தொழில் (சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார)
கர்த்தாக்கள் இல்லவே இல்லை.
அவர்களின் நிழல்களாகிய மாயாக்களே
மேலே கூறிய முத்தொழில்களையும்
செய்கிறது என உணர்க. புராண கதை
களின் நிமித்தமாயும், பூவோக, தெய்வீக
தர்ம நீதிக் கதைகளின் நிமித்தமாகவும்,
உபசார வசனமாக, அவ்வாறு ஸ்ரீ மஹான்
களின் வாயிலாக தர்மத்தை ஸ்தாபிக்கும்
நிலையில், கூறப்பட்டதாகும் என உணர்க.
மாயாக்கள் தோற்றும் நிலையில் அவைகளே
கலைமகள் / அலைமகள் / மலைமகள் / / ஸ்ரீ
தோற்ற நிலையில் யோகமாயா!






என்றும் உபசாரமாக சொல்லி வைத்
தார்கள் ஸ்ரீமஹான்கள். இந்த மூப்பெரும்
தேவியர்களே இவ்வாறு அம்மூன்று
பேர்களிடம் முத்தொழிலையும் செய்வதாக
ஒப்புவித்தார்கள். அம்மூவரையும்
(ஏற்றுதொள்ள செய்தார்கள்)
"மௌனம் கலகநாஸ்தி!" என்ற நிலையில்
ஏற்றுக்கொள்ளும் பாவனையால் மௌனம்
சாதித்தார்கள் என ஸ்ரீமஹான்கள்
வாயிலாக அறிகிறோம். ஆனால் மூவரும்
எந்த விடையும் ஹரிதுயிலில் உள் ஆழ்ந்தவர்களாய்,
ஏகாக்ர ஹஸித்தர்களாய், மௌனுணந்தர்களாய்,
இருவர் அமர்ந்த நிலையிலும், ஒருவர் மட்டும் சயனித்தவராய்
இருக்கிறார்கள் என்பது அனுபவானந்தமாகும்.
இம்மூவரும் ஸத்குரு நிலையில்தான் இருக்கிறார்
களேயன்றி;



49

தொழில் கர்த்தாக்கள் நிலையால் இவ்வி
யென்பதே ஸத்தியமாகும்.
இதை அறிவுடன் உணர்க.


குரு ஸ்துதியில் ஸ்ரீமஹான்கள்
கூறுவதாவது :- (1) குரு ப்ரம்மம் :-
குருவே காலாதீத பரப்பிரம்மம்.
(2) குரு விஷ்ணு :- குருவே காலாதீதமாகிய
ஆகாயம் என்ற மூலப்பிரகிருதி ஆகும்.
யோகமாயா என்றும், அவ்யக்தம் என்றும்,
ஆதி ஸ்ரீமஹான்கள் கூறுவர்.
(3) குரு தேவோ மஹேஸ்வரஹ :-






குருவே மஹத்தாய், எங்குமாய், ஏகமாய்,
எல்லாமாய், பரந்து விரிந்த மஹேசன்
ஆகும். சேர்த்துக்கொள்ளும் இருப்பை உடையவன்.

4 குரு சாட்ஷாத் பரப்பிரம்மம் :—
ஸத்குருவே ஸத்தியமான, ஸாஸ்
வதமான, காலாதீத பரப்பிரம்மம் ஆகும்.
இப்படி பிரம்மம், பிரம்மம், பிரம்மம் என
குறிப்பிட்டழைக்கும் ஸ்ரீ மஹான்கள்!
என்ன கூறுகிறார்கள் என்றால் ?????
நாமரூபத்துடன் துவங்கும், விளங்கும்
இந்த ஜக, ஜீவ, ஜட, கட, படாதிகள்!
அத்தோற்றத்துடன் பிரம்மம் இல்லையென்றும்;



பிரம்மம் இல்லாமல் இத்தோற்றங்கள்
இல்லையென்றும்; அதாவது?
நாமரூபங்கள் மண்ணில் இல்லையென்றும்;
மண்ணில்லாமல் நாமரூபங்கள் ,, ;
ஸத்தியப்பிரமாணமாய் பிரம்மத்தை
சொல்கிறார்கள்.
அவ்வாறு ஏன் கூறுகிறார்கள் என்றால்?
சதாசிவம் என்றால் யாம்யாமாகவே த்கு
இருக்கிறோம் என்ற ஓர் இருப்புத்தன்மை
மட்டுமே பொருந்தும் என்றும், அது
இயக்கமற்ற பரகுருவுக்கு மட்டும்தான்
பொருந்தும் என்றும் உணர்க. இயக்கமுற்ற



52

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸத்குருவாகிய, மஹேசனுக்குத்தான்
பொருந்தும் என்றும்; ஆதிஸ்ரீமஹான்கள்
ஸத்குருவுக்குத்தான் குருஸ்துதியை
பாடிவைத்தார்கள் என்றும் உணர்க.

5 தஸ்மை "ஸ்ரீ" குருவே நமஹ:—
தத்பத பரமாத்ம சொருபமும் ஸத்குருவுக்கே
பொருந்தும் என்பதை வலியுறுத்தி
கூறிவிட்டு; உலக ஸாஸ்திர கட்டுப்பாடு
நிமித்தமாக ஸாமான்ய குருவுக்காகவும்
"ஸ்ரீ" என்ற புகழஞ்சலியையும்
சாத்திவிட்டு பேதமற்ற நிலையில் ஸத்குரு
ஸ்துதியை பாடிவைத்தார்கள் என அறிக.




# திருமூலரும் திருமந்திரமும்!

16

முடிவில் :- அப்படிப்பட்ட எம் ஸத்குரு
வுக்கு அவர் ஸ்ரீபாதங்களில்
பணிந்து நமஸ்காரம் செய்கிறோம் என
குருஸ்துதியை நிறைவு செய்கிறோம்.


16

அன்பும் சிவமும் இரண்டென்பார்
அறிவிலார்.
அன்பும் சிவமும் ஒன்றென்பதை
அறிகிலார்.
அன்பும் சிவமும் ,,
அறிந்த பின் ;
அன்பே சிவமாக அமர்ந்திருப்பாரே.




கருத்து :— அன்பு என்பது அசைவுள்ளது.
அது பந்தம் பாசமற்றது. ஏக குணமுள்ளது
இருமாயாக்களின் தொடர்புடையது.
தெய்வீகம் நிறைந்தது. லௌகீகம்
அணு அளவும் இல்லாதது.
(லௌகீகம் என்றால் பாசமாகும்)

சிவம் என்பது அசைவற்றது. காலாதீத
பரசொரூபமாகும். சுத்த பிரம்மமாகும்.
யாம் யாமாக இருக்கிறோம் என்ற ஓர்
இருப்புத்தன்மையோடு கூடியதாகும்.
இதற்கு நாம ரூப நிலையில் விளக்கம்
கொடுப்பதென்றால்? கீழே காண்க :—
சிவம் என்பது எலும்பாகும்.
அன்பு என்பது தசை & நரம்பு & குருதி ஆகும்.






(அன்பு) இதை சக்தி என்றும் உதாரணமாக
சொல்லலாம். எலும்பு இல்லாமல் தசை
நரம்பு குருதி ஆகிய இவைகள் நிலைபெறாது.
தசை நரம்பு குருதி இல்லாமல் இருப்புத்தன்மை
மட்டும் உடைய எலும்பால் எந்த
பிரயோஜனமும் இல்லை. ஆ...க...வே?
சிவம் இல்லாமல் அன்பால் இருக்கவோ?
இயங்கவோ? முடியாது. அன்பு இல்லாமல்
சிவம் இருந்தும் பிரயோஜனம் இல்லை.
ஒரே வார்த்தையில் கூறுவதென்றால்?
எலும்பு & தசை & நரம்பு & குருதி ஆகிய
இவை நான்கும் இணைந்தால்தான் உடல் என்றும், தூலம்
என்றும் சரீரம் என்றும் பிரம்மத்தின்
அனைத்தும் அடங்கி ஒடுங்கி மயமாகிவிடும்.



நாம ரூப ஜக ஜீவ ஜட கட படாதிகள்
எல்லாம் மனக் கண் களுக்கு தோன்றும்
நிலையில் தோற்றிக் கொண்டும்; மின்சாரம் போன்று,
தோற்றுநிலையில் ஸ்வயம் ஜோதியாய்
சர்வ வியாபகமாய் எங்கும், எதிலும்,
எல்லாமாய் பராபர வஸ்துவாய் நீக்கமற
நிறைந்திருக்கிறது என அறிக.

இதன் உண்மை யாவது?



57

நாம ரூப ஜீவ குண தோஷ

சொந்த பந்த பாச பற்றின்!

ம ய க் க மே!

நானா விதமாக, விசித்திர விதைதமாக தோற்றி


இந்த மனம் படைத்த மனித ஜீவனை மட்டும்!

அலைக்கழித்து அல்லலுற செய்து (புண்ணிய பாப)

இருவினைகளையும் அள்ளி அள்ளி வழங்கி,

ஜனன மரண கூபத்தில் தள்ளி விடுகிறது.


மேலே கூறிய நிலையில் அன்பு பாசமாக மாறி (நாமரூப மயக்கம்)
இக்கர்ம காரியம் நடைபெறுகிறதனை உணர்க.



58

ஆ.............. து.............. வே?


அன்பே சிவம். சிவமே அன்பாகும்.
ஒன்றில்லையானால் ஒன்றில்லை என அறிக
மண் இல்லாமல் பாண்டம் இல்லையென்று
பாண்டம் இல்லாமல் மண்ணாய் இருந்தும்
பிரயோஜனம் இல்லையாதலால்
மண்ணை இல்லையென்றும் கூறலாம்.
பழக்க (பேச்சு) வழக்கத்தில் (செய்கையில்)
பாண்டங்கள் (நாமரூபங்கள்) முக்கிய
இடம்பெறுவதாலும். பாண்டங்கள்
இல்லாமல் உலக வாழ்வு இல்லையாதலாலும்,
கண்களுக்கு பாண்டங்கள் தான்
தெரிகிறதேயன்றி, மண் தெரிவதில்லை. ஆ
மண்பாண்டங்கள் என
சொல்லிவிடுகிறோம், அவைகள் மண்ணை



59


நிலைத் திருப்பதில்லை. (பழக்கவழக்கம்தான்
நிலைபெறுமேயன்றி வெறுமனே உணர்வது
நிலைபெறுவதில்லை) ஆகவே இந்த நாமரூப
மயக்கமே ஜனனமரணத்தை கொடுக்கிறதென்று
உணர்வால் உணர்ந்தால் போதும்.

முடிவு:- அன்பேசிவம் / சிவமே அன்பாகும்:
நாமரூபங்களுள் பிரம்மம் சாக்ஷாத்காரித்திருக்கிறது.
பிரம்மம் இல்லாமல் நாமரூபங்கள் இல்லை.
இவ்விரண்டும் ஒன்றே என உணர்ந்தோர்
பேரறிவுடையோர் ஆவர். உணர்ந்தோர் மனம் வசம் கொண்டோர்
இவ்விரண்டும் ஒன்றே என உணர்ந்தோர் அபேத நிலையில்
அசைவற்று சிவம் என்ற பிரம்மத்தில் இரண்டறக் கலந்து
அகண்டாகாரத்தில் அதுவாகவே அமர்ந்திருப்பார்.



# 17 ஸ்ரீபகவானும் பரமும்!


(1) ஸ்ரீபகவான் :- முன்பாடங்களில் கூறி
உணர்த்தியபடி, 7 (ஏழு) தெய்வங்களும்!
கலியுகத்திற்காக மாயாவையும்!
(கலைமகள்! அலைமகள்! மலைமகள்/ஆகிய மூவரையும்)
ஒன்றாக இணைத்து (ஸ்ரீ அன்னை) 8 (எட்டு) ஆக
ஸ்ரீபகவான் என சேர்த்துக் கொள்ளலாம். க
இவை எட்டும் மாயாவை அடிப்படையா
வைத்து ஸத்வ குண நிலையில் இயங்கக்கூடியவை
என உணர வேண்டும். இவைகளின் இயக்கம்
சூட்சுமமான புண்ணிய பாபவினை & சூட்சும விதி
ஆகியவையாகும். வினை இல்லையானால் நாம
விதிக்கு வேலையில்லை. விதி இல்லையானால் ரூப
உலக இயக்கம் இல்லையென்றே சொல்லலாம்.
ஆனால் வினை & விதி & நாமரூப உலகம் ஆகிய





இம்மூன்றும்; ஸத்திய (வாக்கு) தர்மத்திற்கு (செய்கைக்கு) கட்டுப்பட்டே இவ்வுலகம் இயங்குகிறது என அறிக. மேலும் இவை மூன்றும் மனதின் பிறப்பிடமாகும். ம ன ம் இல்லையானால் உலகமும் இயக்கமும் இல்லை யென்றே சொல்லலாம். பக்திக்கோ? முக்திக்கோ? சாதனை செய்யும் ஓர் முமுட்சுவானவன் அக்கலியில் ஸ்ரீபகவன் நாம தியானத்தில் ஒன்றி ஸ்ரீபகவந்நாம ஸ்மரணையுடன் ஒன்றி ஆதாரகு மயமாக வேண்டும். அப்போதுதான் மாயாவானது மனதை ரசித்து மன அடர்வாடுகளை நாசம் செய்யும். தடை இல்லாமல் சாதனை செய்யலாம்.


கண்ணன்



62

பரம்:

2 இது ஜீவன் முக்தி ஸ்தவமாகும்.
ஸ்தவம் என குறிப்பிட்டது உபசாரவசனமே.
பக்திக்கு லோகமாயா(வின்) இயக்கத்தின் நிலையில்
இருந்து கொண்டு உபகாரமாக இருக்கும்.
முக்திக்கு யோகமாயா தான் செயல்படாமல்
தம் கூர்ந்த திருஷ்டியான கிருபையின்
பார்வை ஒன்றில் பார்க்கும்.
அங்கு லோகமாயா அப்பக்குவ ஆன்மாவுக்கு
ஆவன செய்யும். பரமாகிய அந்நிலை பெறுவ
தற்கு ஓர் ஸத்குருவின் துணை (கிருபை)
பெற்றுவொழிய ஜீவன்முக்தி இல்லையென்றே
சொல்லலாம். ஜீவன்முக்திக்கு சாதனை
செய்யும் பக்குவ ஆன்மா நேராகவே அது நாம்
நாம் அது என்ற அகண்டான்மபாவனை செய்
வாராயின் இக்கலியில் மட்டும்





வெகு வெகு, வெகு வெகு, வெகுவெகு, கடினம் ஆகும்.


ஸத்தியமாய் உணர்க.

ஆனால் முடியும். காரணம் :

கலிதோஷ, மன வக்ர குணங்கள் சாமான்யமாக நாசமாகாது என உணர்க.

ஸ்ரீஸத்குருவானவர் மாயா சம்பந்தம் இல்லாதவர். ஸ்ரீபகவான் ஒருவனே மாயா சம்பந்தம் உடையவன். அவன் ஒருவனே மாயா & மனம் & வினை & விதி / இவைகளின் நெளிவு சுழிவான இயக்கங்களை அறிய முடியும்.

ஆகவே ஸ்ரீபகவான் மூலமாகத்தான் தெளிவு & தீர்வு காண முடியுமேயன்றி மற்றொன்றும் ஆகாது என ஸத்தியமாய் உணர்க.



64

ஆகவேதான் எந்தொழில் செய்தாலும்

ஏதுவந்தை (தூலசரீரமே சிரமங்கள் அனுபவித்தாலும்) பட்டாலும்

முக்தர் மனம் இருக்கும் மோனத்தே. அதாவது

இறைநாமம் உணர்வோடு இருப்பான்! இருக்க

வேண்டும் / இருந்தே ஆக வேண்டும்.


(உன் லட்சியத்தில் உறுதிகொள்.)

அது ஒன்றே மனம் & வினை & விதியை

சர்வநாசம் செய்யும் பிரம்மாஸ்திரம் ஆகும்.

பரம் (குருநாமம்) ஜீவன்முக்தியை கொடுக்கும்

எண் பது பத்தியமே!!!




இறை ஸ்ரீபகவந்நாமம் அடியார்களை
ஜீவ நாசம் செய்யும். அடியார்கள்
நாசமாகாமல் ஜீவன் முக்தியின் சாதனையில்
அதுவே நாம்! நாமே அது என நிலைத்திருப்பது
எப்படி???
சற்று பொறுமையுடனும், நிதானத்துடனும்
உள் ஆழ்ந்த கவனமுடனும் உணர்ந்து பார்த்தால்
இந்த உண்மை விளங்கும் என உணர்க.
குரு நாமம் பிரதானமே. அதே போல்
இறை ஸ்ரீபகவந்நாமம் அபய ஹஸ்தமாகும்.
அபய ஹஸ்தம் பெற்றபின் பிரதானமான
ஜீவன் முக்தி இயல்பாகிவிடுமே. உணர்க.
இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே.

பாபா
கண்ணன்


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!